தமிழ் / TAMIL

தாள் I / Paper I

(இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : **மூன்று** மணி நேரம் *Time Allowed : **Three** Hours*	மொத்த மதிப்பெண்கள் : **250** *Maximum Marks : **250***

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவுசெய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடரவேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions :

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.*

The number of marks carried by a question/part is indicated against it.

*Answers must be written in **TAMIL**.*

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

SECTION A

Q1. பின்வரும் ஒவ்வொன்றிற்க்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக : *10×5=50*

(a) திராவிட மொழிகளில் தமிழின் இடம் *10*

(b) சங்ககாலத் தமிழில் துணைவினைகள் *10*

(c) அகத்திணைக்குப் புறமாகும் திணைகள் *10*

(d) சிலம்பின் தொடர்ச்சியே மேகலைக் காப்பியம் *10*

(e) சிற்றிலக்கியங்கள் தோன்றிய பின்புலம் *10*

Q2. (a) தமிழில் வேற்றுமையுருபுகளின் வளர்ச்சிநிலைகளை விளக்குக. *20*

(b) எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளைப் புலப்படுத்துக. *15*

(c) பல்லவர் காலத் தமிழில் நிகழ்ந்த ஒலிமாற்றங்களை விளக்குக. *15*

Q3. (a) தொல்காப்பிய அகத்திணைக் கோட்பாடுகள் சங்க இலக்கியங்களில் தொடர்கின்றனவா ? ஆராய்க. *20*

(b) சிலம்பில் கிளைக்கதைகள் பெறும் இடத்தினை மதிப்பிடுக. *15*

(c) இக்காலத்திற்குப் பயன்படும் வாழ்வியல் விழுமியங்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன என்பார் கூற்றை அரண்செய்க. *15*

Q4. (a) புதுக்கவிதை வளர்ச்சியல் வானம்பாடியின் பங்களிப்பு யாது ? மதிப்பிடுக. *20*

(b) ஓசை நயமும் இலக்கிய நயமும் மிக்கவையா பரணி இலக்கியங்கள் ? ஆராய்க. *15*

(c) சிறுகதை இலக்கியத் தோற்றத்திற்கான சமூகப் பிற்புலத்தை விளக்குக. *15*

SECTION B

Q5. பின்வரும் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக : *10×5=50*

(a) படிமம் *10*

(b) மெய்ப்பாடு *10*

(c) பழமொழிகளின் அமைப்பும் பயன்பாடும் *10*

(d) மொழிபெயர்ப்பின் பயன்கள் *10*

(e) தமிழ் நாளிதழ்களின் வளர்ச்சி வரலாறு *10*

Q6. (a) சங்க அக இலக்கிய அடிப்படையில் உள்ளுறையை விளக்குக. *20*

(b) கதைப்பாடல்களின் பொதுவான அமைப்பு முறையினை விளக்குக. *15*

(c) ஐந்து திணைகளிலும் வழக்கிலிருந்த வழிபாட்டு முறைகளைப் புலப்படுத்துக. *15*

Q7. (a) சமூகவியல் நோக்கில் நாட்டார் இலக்கியங்களை ஆராய்க. *20*

(b) தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த புதினங்கள் இரண்டைத் திறனாய்க. *15*

(c) சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் அக்காலப் பழக்கவழக்கங்களைப் புலப்படுத்துக. *15*

Q8. (a) தமிழ்ப் பண்பாட்டில் நிகழ்ந்த மாற்றங்களைச் சங்கமருவிய இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளனவா ? ஆராய்க. *20*

(b) ஒப்பியல் இலக்கியத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்குக. *15*

(c) பல்லவர் காலக் குடைவரைக் கோயில்களின் வளர்ச்சி நிலைகளைப் புலப்படுத்துக. *15*